# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 121 24—02—1995

இதழ்: 4 விலை ரூபா 5-00


**தபசுகாலம் ஆரம்பம்**

**திருநீற்றுப் புதன்**

சுத்த போசனமும் ஒரு சந்தியும்

**01-03-1995**

**திருப்பாலத்துவ சபைத் தினம்**

**26-02-1995**

( பார்க்க பக்கம் 3 )

* கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் *

முத்திப்பேறு பெற்ற யோசேவ் வாஸ் அடிகளாருக்காக — கொழும்புத்துறையில்

# இறைவனுக்கு நன்றிகூறி மாபெரும் நன்றிவிழா

**கடந்த தை மாதம் 21ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடலில் இலட்சக்கணக்கான இறைமக்கள் மத்தியில் பரிசுத்த பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பரினால் முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தப்பட்ட 'இலங்கையின் அப்போஸ்தலர்' யோசவ் வாஸ் அடிகளாருக்காக இறைவனுக்கு நன்றிகூறி ஒரு மாபெரும் நன்றி வழிபாடு இம் மாதம் 23ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4. 30 மணிக்கு யோசவ் வாஸ் அடிகளார் முதன்முதலில் காலடி பதித்ததாக கருதப்படும் கொழும்புத் துறையிலுள்ள புனித சவேரியார் குருமட மைதானத்தில் நடைபெறும்.**

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ். மறைவட்டத்தின் எல்லாப் பங்குகளிலிருந்தும் வரும் இறைமக்கள் மாலை 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன் மைதானத்தில் ஒன்று கூடி நன்றிச் சுலோகங்களை தாங்கியவாறும், புகழ்ச்சிக் கீதங்களை இசைத்தவாறும் பவனியாக கடற்கரைவீதி வழியாக குருமட மைதானத்தை சென்றடைவார்கள். முதல் நிகழ்வாக யாழ். ஆயர் அவர்கள் சகல குருக்களுடனும் இணைந்து நன்றித் திருப்பலி நிறைவேற்றுவார். இத்திருப்பலி வழிபாடுகளில் அனைத்து பங்குகளினதும் பிரதிநிதிகள் பங்களித்து சிறப்பிப்பார்கள். அமல மரித் தியாகிகள் சபையின் ஆலோசகரும் 'மறை உரைஞர்' இல்ல இயக்குனருமாகிய அருள் திரு. பி. யேசுநேசன் o.m.i அடிகளாருடைய மறையுரை திருப்பலியின் போது நிகழ்த்தப்படும்.

திருப்பலியின் பின்னர் ஆயர் தலைமையிலான பொதுக் கூட்டம் நடைபெறும். இதில் பலசிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறும். இதனைத் தொடர்ந்து முத்திப்பேறு பெற்ற யோசவ் வாஸ் அடிகள் பற்றிய மறைக்கோட்ட மட்டங்களில், மறைமாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன.

இவற்றைத் தொடர்ந்து இடம்பெற இருக்கின்ற கலை நிகழ்வுகளில் சிறப்பு நிகழ்வாக புனித சவேரியார் குருமட அருள்சகோதரர்களின் 'யோசவ்வாஸ் அடிகளின் வாழ்வும் பணியும்' என்ற நாட்டுக் கூத்து மேடையேற்றப்படும்.

இந்நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிப்பதோடு மட்டுமல்லாமல், எமது நாட்டுக்கு இறைவன் தருகின்ற புனிதருக்காக இறைவனுக்கு நன்றிகூற அணிதிரண்டு வருமாறு யாழ். மறைவட்ட இறைமக்கள் அனைவரும் அன்போடு அழைக்கப்படுகின்றார்கள்.

★ ஜெபா

## யாழ் ஆயர் முன்னிலையில் தன்னைப் புதுப்பித்த பல்கலைக்கழக கத். மாணவர் ஒன்றியம்

பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்திற்காகத் தயாரிக்கப்பட்ட புதிய யாப்பு 15-2-1995 புதன்கிழமை பி. ப. 5 மணிக்கு யாழ். ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உடனிருக்க உறுப்பினர்களுக்கு வாசித்து விளக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஆயர் அவர்கள் உரையாற்றும்போது, யாப்பில் குறிப்பிட்டுள்ள உயர்ந்த நோக்கங்கள் நிறைவுறுமாயின், இளமைக் காலத்தின் நிறைவை உறுப்பினர்கள் பெறமுடியுமென்றார் வாசிக்கும் பழக்கம் அருகிவரும் இக்காலத்தில் அறிவில் நிறைவு பெற நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதன் அவசியத்தை ஆயர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அதன்பின்னர் நடைபெற்ற புதிய கல்வியாண்டிற்கான செயற்குழு தேர்தலில் :

( தொடர்ச்சி 6-ம் பக்கம் )

## அருள்திரு பீற்றர் பொன்கலன் O. M. I. அடிகளாரின் குருத்துவ வெள்ளி விழா



1970ஆம் ஆண்டில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம், சிலாபம், திருகோணமலை மறைமாவட்டங்களில் பணி புரிந்து, தற்போது அமெரிக்காவில் அமலமரித் தியாகிகளின் மாகாணம் ஒன்றில் இணைந்து, அங்கு தமது பணியை சிறப்புற புரிந்துவரும் சில்லாலையைப் பிறப்பிடமா

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

வங்காலையில்

## மேரி பஸ்ரியன் அடிகளாருக்கு 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

1985 தைத்திங்கள் 6ஆம் நாள் திருக்காட்சித் திருவிழா ஆயத்தம், முன்னிரவு பௌர்ணமி அன்று வங்காலை ஆலயப்பங்குத்தந்தை அருள்திரு. மேரி பஸ்ரியன் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானார். அவருடன் கொல்லப்பட்ட அறுவர் டோமினிக்நாதன் குரூஸ், அழகுரெட்னம், யோண், ஹேர்மன் அஞ்சல்மூர் பீரீஸ், குயின்ரன் பீரீஸ், திரு. அலக்சாந்தர் முறாய்ஸ், திருமதி. சூசைஆயிசம்மா ஆகியோரையும் நினைந்து 1995.01.06 காலை 7மணிக்கு மன்னார் மறைஆயர் பேரருள்திரு. இராயப்பு யோசேவ் ஆண்டகை குருக்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி நிறைவேற்றினார்கள்.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

திருப்பாலர் சபை தேசிய நடுநிலைய

## அருள்சகோதரி நிர்மலாவின் யாழ் விஜயம்

''சிறுவர்களின் ஊக்குவிப்பாளர்கள் ஆன்மீகத்தில் சிறந்து விளங்க வேண்டும். அப்போதுதான் நல்லமுறையில் பணிபுரிய முடியும்''. இவ்வாறு திருப்பாலர் சபை தேசிய நடுநிலையத்தில் தமிழ் மொழிப் பிரிவுக்கு பொறுப்பாக பணிபுரியும் அருள்சகோதரி நிர்மலா அவர்கள் யாழ். மறைவட்ட திருப்பாலர் சபை ஊக்குவிப்பாளர்களிடையே உரையாற்றும் போது கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் திருப்பாலர்சபை சிறுவர்களின்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## அருள்சகோதரர்களின் வெள்ளிவிழா

புனித பிரான்சிஸ்கன் சபையின் அருள் சகோதரர் மார்க்கஸ், அருள் சகோதரர் இக்னேசியஸ் அவர்களின் துறவற வாழ்வின் 25வது ஆண்டு வெள்ளி விழா எதிர் வரும் 11 - 02 - 95 மாத்தளை புனித பிரான்சிஸ்கன் அருள் சகோதர சபையின் தலைமை இல்லத்தில் நடைபெற்றது. வெள்ளி விழா

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## கற்கோவளத்தில் திருமறைக்கலா மன்றம்

பருத்தித்துறை கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா 29.01.95 ஞாயிறு அன்று கொண்டாடப்பட்டது. அன்று மாலை விழாவை சிறப்பிக்க திருமறைக்கலா மன்றத்தினரின் ''அனைத்தும் அவரே'' என்னும் நாட்டுக் கூத்தும் ''ஞான சௌந்தரி'' என்னும் இசைநாடகமும் மேடையேற்றப்பட்டன. இந்து சமய

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

முத்திப்பேறு பெற்ற

## யோசேவ் வாஸ் நன்றி வழிபாடு

காலம் : 23–2–1995 வியாழன், மாலை 4-30 மணி

இடம் : கொழும்புத்துறை–புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்பில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரால் முத்திப்பேறு பெற்றவர் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட

**யோசேவ் வாஸ்**

யாழ். வந்து இறங்கிய இடமாகிய கொழும்புத்துறையில்

**நன்றி வழிபாடு**

யாழ் மறைமாவட்ட அனைத்து ஆலய திருச்சபைகளும் அணிதிரண்டு வருக.

**நிகழ்ச்சி நிரல்**

மாலை 4-30 மணி : ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி

மாலை 5-45 மணி : சிறப்பு நிகழ்வுகள்

மாலை 6-30 மணி : ''யோசேவ் வாஸ்'' நாட்டுக்கூத்து (மெருகூட்டப்பட்ட ஆட்டக்கூத்து)

குறிப்பு : திருப்பவனி மாலை 4-30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகும்.

யோசேவ் வாஸ் செயலகம்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

# எம்கருத்து

## என் கடன் பணி செய்து கிடப்பதே

யாழ் திருச்சபை முத்திப்பேறுபெற்ற யோசேவ் வாஸ் அடிகளாருக்கு விழா எடுப்பது தகுதியும் பொருத்தமுமாகும். அடிகளின் கால் சுவடுகளால் புனிதப்படுத்தப்பெற்ற எம் மண்ணின் மக்கள் மனதில் அவர் விதைத்த கிறிஸ்தவ விழுமியங்கள் பெரும் விருட்சமாக வளர்ந்து பயனளிக்கின்றனவா என்று கேள்வி எழுப்புவதும் நீதியும் நியாயமுமாகும்.

நாம் எடுக்கும் விழாக்கள் வெறுமனே நிகழ்வுகளாய் அமையாமல், அவரின் வெற்றி வாழ்வின் வழியில் நாம் ஒழுக வழிவகுக்கவேண்டும். அப்படியாயின் இன்றுமட்டும் நாம் செய்த ஆயத்தங்கள், எடுத்த முயற்சிகள் நமது எதிர்பார்ப்புகளுக்கொத்த பயனை அளித்தனவா என்று எடைபோடுவதும் சாலச் சிறந்ததாகும்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதை இலட்சியமாகக் கொண்டவர்போல் யோசேவ் வாஸ் அடிகள் மறைப்பணிக்கு மாத்திரமல்ல, மக்கள் பணிக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். அவரின் வாழ்வும் பணியும் ஒவ்வொரு கிறிஸ்தவனின் தனிப்பெரும் பொறுப்பையும் கடமையையும் நம் கண்முன் நிறுத்துகின்றன.

"உலகிற்கு உப்பு நீங்கள் ... உலகிற்கு ஒளி நீங்கள்" (மத் 5:13,14) என்று கிறிஸ்து நமக்குச் சூட்டிய புகழாரங்களுக்கு ஏற்ப நாம் வாழ்வோமானால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒளியின் மகனுக்குரிய செயல்களைப் புரிந்து அயலவனின் வாழ்வை மகிழ்விப்பான். தூய்மையாக்குவதும் பாதுகாப்பதுமான ஆற்றலுடைய உப்பைப்போல், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னை மாத்திரமன்றி, தான் வாழும் சமுதாயத்தையும் கறைகளிலிருந்து காத்துத் தூய்மைப்படுத்தும் கனிவான மனத்தைப் பிரதிபலிப்பான்.

இறைவனை மறந்து அல்லது புறக்கணித்து ஆன்மீக இருளில் அலைமோதும் உள்ளங்களின் எண்ணிக்கை இன்றைய உலகில் பெருகிவருகிறது. இவர்கள் எல்லாம் மீண்டும் அக இருள் அகற்றப்பட்டு ஒளி பெறவேண்டுமானால் நம் வாழ்வுதான் அவர்களுக்கு கலங்கரைத் தீபமாய் அமைய வேண்டும்.

உப்பு உணவோடு கலந்து தன் உருவையே இழக்கின்றது; உணவுக்கு உருசி கொடுக்கின்றது. மெழுகுதிரி தன்னையே அழித்து பிறருக்கு ஒளி உமிழ்கிறது. நம் உள்ளத்திலும், நாம் வாழும் சமூகத்திலும் ஒளி வீசவேண்டுமாகில் நம்மையே அழித்து மக்கள் பணியில் ஈடுபடவேண்டும்.

பண்டு தொட்டு மனிதன் கண்டுணர்ந்த உண்மை ஒன்று: பெறுவதைவிட கொடுப்பதில்தான் நிறை இன்பம் காண முடியுமென்பதே அது. மன நிறைவும் மகிழ்ச்சியும் ஒருவன் அடைய வேண்டுமானால் தன்னையே பிறருக்குத் தகனம் செய்யவேண்டும். தன் உடைமைகளையும், ஆற்றல்களையும், திறமைகளையும், தன்னையுமே பிறர் பணியில் அர்ப்பணிப்பதன் மூலம் உண்மையான நிறைவைக் காணமுடியும். இந்த உண்மையைத்தான் முத்திப்பேறுபெற்ற யோசேவ் வாஸ் அடிகளின் வாழ்வு உணர்த்துகின்றது.

அடிகளின் பணி வாழ்க்கைப் பயணம் கரடு முரடான பாதையில் மேற்கொள்ளப்பட்டது. இன்றைய முழு மனித விடுதலைப் போராட்டப் பாதையில் நாம் அன்றாடம் சந்திப்பதுபோல், கல்லு முள்ளு இல்லாத பாதையும் இல்லை; துன்பங்களில்லாத வாழ்வுமில்லை. துன்பமும் துயரமும் தோல்வியும் வாழ்வில் தொடர்ந்து வரும்போது, வாழ்வு சுமையாக, சூறாவளியாக, கசப்பாகத்தான் காணப்படுகின்றது. இத் துன்பக் கலம் அகலமுடியாதா என மனம் சஞ்சலப்படும் போது, "என் விருப்பப்படி அன்று, உமது விருப்பப்படி ஆகட்டும்" (மத். 26:39) என்ற கிறிஸ்துவின் மனநிலை நமக்கு பக்கபலமாக இருக்க வேண்டும். 'வேதனைகள், நெருக்கடி, இடுக்கண், சாட்டை யடிகள், சிறைவாழ்வு, குழப்பங்கள் அயரா உழைப்பு, கண விழிப்பு, பட்டினி இவற்றையெல்லாம் மிகுந்த மனஉறுதியோடு ஏற்றுக்கொண்டு ... அனைத்திலும நாங்கள் கடவுளின் பணியாளரென்றே நடத்தையில்" (2 கொரி. 6 : 5, 8) நாம் காட்ட வேண்டும்.

நாம் உலகின் உப்பு, உலகின் ஒளி என்பதை, குற்றம் குறையற்றதும், சேவை, அன்பு, தியாகம் நிறைந்ததுமான வாழ்வால் பிரதிபலிப்போமாக.

# 2000 யூபிலி ஆண்டு உடனடி ஆயத்தம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

37. முதற் சகாப்தத்தினது திருச்சபை வேதசாட்சிகளினது இரத்தத்திலிருந்து தோன்றியதாகும். "வேதசாட்சிகளின் இரத்தமே கிறிஸ்தவர்களின் வித்து" வேசாட்சிகளின் வித்தும், முதற் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் தமது முதுசொத்தாக வழங்கிய புனிதத்துவமும் அன்று இல்லாதிருந்தால், பேரரசர் கொன்ஸ்தாந்தீன் காலத்து வரலாற்று நிகழ்ச்சிகள் முதலாம் சகாப்தத்தில் திருச்சபை அடைந்த வளர்ச்சிக்கு வழிவகுத்திருக்கமாட்டா. இந்த இரண்டாம் சகாப்தத்தின் இறுதியில் திருச்சபை மீண்டும் வேதசாட்சிகளின் திருச்சபையாகிவிட்டது. விசுவாசிகளான குருக்கள், துறவியர், பொதுநிலையினர் துன்புறுத்தப்படலால், உலகின் பல பாகங்களில் அவர்களது உயிர்தியாகத்தின் வித்து ஊன்றப்பட்டுள்ளது. உகண்டா வேதசாட்சிகளுக்கு புனிதபட்டம் அளிக்கும் வைபவத்தின்போது பாப்பு 6ஆம் சின்னப்பர் தமது திருவுரையில் சுட்டிக்காட்டியதுபோல் இரத்தம் சிந்தியும் கிறிஸ்துவுக்கு சான்று பகர்வது கத்தோலிக்கர், ஓதொடொக்ஸ் கிறிஸ்தவர், அங்கிளிக்கன், புரொட்டஸ்தாந்து சபையினர் அனைவருக்கும் ஒரு பொது மரபுரிமை ஆகிவிட்டது.

இந்த சான்று பகர்தலை மறக்கலாகாது. ஆரம்ப நூற்றாண்டுகளில் திருச்சபை நிருவாக அமைப்பில் பெருமளவு கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும், வேதசாட்சிகளின் சான்றுகளை விசேட வரலாறுகளில் அக்கறையுடன் எழுதிவைத்தனர். இந்த வேதசாட்சிகளின் வரலாற்று நூல் காலத்துக்குக் காலம் மீளமைக்கப்பட்டுவந்துள்ளது. புனிதர், முத்திப்பேறு பெற்றோர் பட்டியலில் கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்தியவர் பெயர்கள் மட்டுமல்லாது, விசுவாசத்தைப் போதித்தவர்கள், மறைபோதகர், ஆயர்கள், குருக்கள், கன்னியர், திருமணமானோர், விதவைகள், சிறுவர்கள் ஆகியோர்களது பெயர்களும் காணப்படுகின்றன.

எமது நூற்றாண்டிலும் வேதசாட்சிகள் உருவாகியுள்ளனர். அவர்களுட் பலர் பெயரறியப்படாதவர்கள். இவர்களை இறைவனின் பொருட்டு உயிர் துறந்த "அறியப்படாத போர் வீரர்" எனலாம். கூடிய மட்டும் அவர்களது சான்றை திருச்சபை இழந்துவிடலாகாது. திருக்கோயில் மன்றத்தில் (Consistory) சிபாரிசு செய்யப்பட்டதுபோல் தலத் திருச்சபைகள் தேவைப்படும் ஆவணங்களை சேகரித்து வேதசாட்சியாக மரித்தவர்களது ஞாபகம் மறைந்து போகாது பாதுகாக்கக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இச்செயல் நிச்சயமாக உலக திருச்சபை முழுவதும் சார்ந்த ஓர் சிறப்பியல்பையும் வெளிப்பாட்டையும் கொண்டதாக அமையும். புனிதர் வேதசாட்சிகளின் ஒன்றிப்பே கிறிஸ்தவ ஒன்றிப்பின் மிகுந்த உறுதிப்பாடான வடிவம் எனலாம். புனிதர்களின் ஐக்கியம் எம்மைப் பிரிக்கும் இதர விடயங்களை விட உரத்துக் குரல் எழுப்புகின்றது. முதல் நூற்றாண்டுகளில் வாழ்ந்த புனிதர்களின் வரலாறுகளே புனிதர் வணக்கத்துக்கு அடிகோலின. தனது புதல்வர் புதல்வியரின் பரிசுத்த தனத்தை பிரசித்தப்படுத்தி வணக்கம் செலுத்துவதன் மூலம் திருச்சபை இறைவனுக்கே மேலான மகிமை அளித்தது. வேதசாட்சிகளுக்கு வணக்கம் செலுத்தும் போது, அவர்களின் உயிர்த்தியாகத்துக்கும் பரிசுத்த தனத்திற்கும் ஊற்றாகிய கிறிஸ்துவுக்கே வணக்கம் செலுத்தியது. பிற்காலத்தில் இவர்களுக்கு புனிதர் பட்டமளிக்கும் வழக்கம் ஏற்பட்டது கத்தோலிக்க திருச்சபையிலும், ஓதொடக்ஸ் திருச்சபைகளிலும் இது இன்றும் வழக்கில் உள்ளது. அண்மைக் காலத்தில் புனிதர் பட்டங்களும், முத்திப்பேறு பட்டங்களும் அதிகரித்துள்ளன.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

### யார் இவர்?

மனம் ஒன்றை நாடும்; செயல் வேறொன்றாய்
இருக்கும்.
காதொன்று கேட்கும்; வாயொன்று பேசும்.
உள்ளத்தில் வஞ்சகம் மறைந்திருக்க,
முகத்திலே புன்னகை பூத்திருப்பான்.
— அவனே வேடதாரி,

R. அதிதி

## புண்ணிய வாழ்விற் பொன்னாவோம்

இயேசுவின் திராட்சைத் தோட்டத்திலே
இகபர சேவகம் இயற்றிடுவோம்
தேசமும் உலகமும் தேசுறவே
தியாகத்தின் வியர்வையைச் சிந்திடுவோம்.
மறைபரப் பிடுமுயர் பணியினிலே
மகிழ்வொடு மனமுறப் பங்கெடுப்போம்
வறுமையின் துயரினில் வாடிடுவோர்
வளமொடு நலமுறக் கைகொடுப்போம்
நற்கனி குலுங்கிடும் மரங்களைப்போல்
நாளும் செபக்கனி வழங்கிடுவோம்
தற்பரன் திருமலர் அடியினிலே
தாரணி சேர்ந்திடத் தவமிருப்போம்
உண்மையின் ஒளியினை ஏற்றிடுவோம்
உதவிடும் கரங்களைப் போற்றிடுவோம்
புண்ணிய வாழ்வினிற் பொன்னாவோம்
புனித நற்பாதையின் கண்ணாவோம்

● யாழ் ஜெயம்

## இன்றைய இளைஞர்களுக்கு அறிவியல் அரிச்சுவடி

மூத்தோர் வாக்கும் முழு நெல்லிக்காயும் முன்னே கசக்கும் பின்னே இனிக்குமாம்.

எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்காத வயது இளம்வயது. ஆனால் சிந்தித்தே தீரவேண்டிய வயதும் அதுதான்.

தொட்ட பின்பே பாம்பென்றறியும் மனிதர்கள். வாழ்க்கைப் பாதையில் நீண்டதூரம் பயணம் செய்யவிருக்கும் இன்றைய இளைஞர்கள் 'உண்டு உண்டு' என்று ஓடி 'இல்லை இல்லை' என்று ஏமாந்து 'எங்கே எங்கே' என்று தேடி இதோ 'இங்கே இங்கே' என்று கண்மயங்கி வெட்ட வெளிப் பொட்டலிலே விட்டெறிந்த பந்தினைப்போல், ஆடி ஓடி அமர்ந்தேன் பராபரமே! என்று அமர்ந்து விடுகிறார்கள்.

அனுபவங்கள் தான் உண்மையைக் கற்பிக்கின்றன. ஆனால் அனுபவசாலிகளின் வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளப் பின் வாங்குவார்கள். அங்கே படிப்பு அந்தப் படிப்பு இங்கே படிப்பு இந்தப் படிப்பு என்று அலைந்து அலைந்து இரு தோணிக்குள் கால் வைத்தவன் போல் ஒரு தோணியிலும் பயணம் ஒழுங்காகச் செய்யாமல் நட்டாற்றில் விழுந்து விடுகிறார்கள்.

வாழ்க்கைக்குத் தேவையற்ற விடையங்களில் ஈடுபட்டு காலம் வீணாகின்றது. பண்பாடற்ற நண்பர்களால் மனம் பாழாகி அலட்சிய மனப்பான்மையால் அறிவு மயங்கி போலி வாழ்க்கையில் மனம் புண்ணாகிப் போகிறார்கள். சுட்ட பின்பு சுடும் என்றும் குத்திய பின்பு முள்ளு என்றும் பட்டுக் கெட்ட பின்பு பரம்பொருளை நினைக்காமல் ஆன்றோர் கருத்திற்கும் முதியோர் வார்த்தைக்கும் செவிமடுத்தல் வேண்டும். "வீட்டு ஈயானது அழுக்குகளிலும் உட்காரும், சுத்தமான சாப்பாட்டிலும் உட்காரும். ஆனால் பூவிலுள்ள தேனை உண்ணும் வண்டானது அதைத் தவிர வேறொன்றையும் மதியாது. நீ வீட்டு ஈயைப் போலிராமல் தேன் வண்டைப் போலிரு".

ஓர் அறிஞரின் இந்த வாக்கு இன்றைய இளைஞன் கடைப்பிடிக்க வேண்டிய அறிவியல் அரிச்சுவடி.

● என். மீரச

யாழ் மறை மாவட்ட

# திருப்பாலர் சபை இயக்குனரின் செய்தி



இவ்வருடம் திருப்பாலத்துவசபைத்தினம் எதிர்வரும் 26ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை உலகளாவிய ரீதியிலே திருச்சபையில் கொண்டாடப்படுகின்றது. சிறுவர்கள் மட்டிலே எமது கரிசனையைத் திருப்புவதே திருச்சபையின் நோக்கமாகும்.

இவ்வருடம் எம்மைச் சூழ்ந்துவாழும் சிறுவர்களை மாத்திரம் அன்று உலகெங்கும் வாழும் சிறுவர்களையும் அதுவும் இன்னல் இடையூறுகள் மத்தியிலே அவதிப்பட்டு வாழ்ந்துவரும் சிறுவர்களைக் கருத்தில்கொள்ள உங்களை அழைக்கின்றேன்.

மிகவும் மனவேதனைக்குரிய விடயம் என்னவென்றால் பலவீனமுள்ள, பிறர்தயவை எதிர்நோக்கி வாழும் சிறுவர்களைக் கண்ணின் இமைபோல் காத்துப்பராமரித்து வரவேண்டியவர்களே, அதே சிறுவர்களை இம்சைப்படுத்திக் கஷ்டப்படுத்திக்கொண்டு வருவதுதான். பெற்றோர்களுக்கு ஆண்டவன் கொடுக்கும் பெரும் செல்வம் பிள்ளைச்செல்வம் குழந்தைகள் எப்பொழுதும் பிறருக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவர்களாக இருக்கின்றார்கள். எனினும் இலட்சக் கணக்கான சிறுவர்கள் பொறுப்பற்ற பெரியோர்களினால் உலகமெங்கும் அல்லற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். சின்னஞ் சிறுவயதிலே பென்னம் பெரியவேலைகள், கள்ளம் கபடம் அற்ற உள்ளங்களுக்கு மிக ஆபாசமான வாழ்க்கை முறைகள், போரினால் ஏற்படும் வறுமை, இடம்பெயர்வு, பெற்றோர் பெரியோர்களின் அலட்சியப் போக்கு இவை போன்ற அவல நிலைகள் சிறுவர்களின் வாழ்வைச் சிதைத்து வருகின்றன.

எம்மைச் சூழ்ந்து வாழும் சிறுவர்களும் இவற்றிற்கு விதிவிலக்கல்லர். இவர்களும் உடல் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு அல்லல் உறுவதை அவதானிக்கின்றோம். வாழவேண்டிய வயதிலே உலகமெங்கும் சிறுவர்கள் சிறிது சிறிதாகச் சாகடிக்கப்படுகின்றார்கள்.

பெருந்தொகையான சிறுவர்களின் இத்துயர வாழ்விற்கு விடிவில்லையா? ஆடிப்பாடி அகமகிழும் காலம் அவர்களுக்குக் கிட்டாதா? இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு நாம் வாழாது இருக்கப்போகிறோமா? உலகின் தீயசக்திகளைக் குறை கூறிக்கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை. பெற்றோர்கள், பெரியோர்களாகிய நாம் என்ன செய்யலாம்? சிறுவர்களின் உலகளாவிய இவ் அவல நிலையை முதற்கண் நாம் எமது கருத்தில் எடுத்துக் கொள்வோம்.

வாழப்போகின்ற இச்சிறுவர்கள் வளரும் தங்கள் காலத்திலே அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொள்ள வழிவகுப்போம் என்று உறுதிஎடுத்துக்கொள்வோம். சிறுவர்கள் இறைவனின் அன்புக்குழந்தைகள் என்பதனை உணர்ந்துகொள்வோம். சிறுவர்களின் நல்வாழ்வுக்கு இடையூறாக இருக்கும் அனைத்தையும், அவர்களின் வாழ்வுப்பாதையில் நின்று அகற்றிவிடுவோம் அவர்களுடன் அன்புடனும், ஆதரவுடனும் நடந்துகொள்வோம்.

திருப்பாலர்சபைச் செயற்பாடுகள் இப்பாரிய பிரச்சினை தீர நம் தாய்த் திருச்சபை அளிக்கும் சிறிய பங்களிப்பு, இறைவனின் பிள்ளையாக வாழவைப்பதன் ஊடாக நாட்டுக்கும், சமூகத்திற்கும் உகந்தவர்களாக வளர்க்கத் திருச்சபை எடுக்கும் ஒரு முயற்சி எனவே, எமது பங்குத்தளங்களில் திருப்பாலத்துவ சபைச் செயற்பாடுகளை இன்னும் அதிகம் ஊக்குவிப்போம்.

திருப்பாலர்சபை அங்கத்தவர்களும் ஊக்குவிப்பாளர்களும் நாங்கள் இறைவனின் சிறிய கருவிகளாக இருக்கிறோம் என்பதனை உணர்ந்து, ஊக்கத்தோடும், ஆர்வத்தோடும் சிறுவர்களின் நல்வாழ்வைப் பாதிக்கும் இத்தீமைகளை அகற்றிட நற்பண்புகளை வளர்க்கப் பாடுபடுவோம்.

● அருள்திரு.
ஜெஜி இராஜேஸ்வரன்.

யோசேவ் வாஸ் குழுத்தலைவரின் செய்தி

# கொழும்புத்துறையில் வந்தனைக்குரிய யோசேவ் வாஸ்



இலங்கை அப்போஸ்தலர் என அழைக்கப்படும் ஆசாரத்துக்குரிய யோசேவ் வாஸ் அடிகள் சென்ற தைத்திங்கள் 21-ம் நாள் முத்திப்பேறு பெற்றவர் எனப் பிரகடனப் படுத்தப்பட்டமை எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியான விடயமாகும். இதற்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

ஒல்லாந்தர்கள் கத்தோலிக்க மதத்தின் மட்டில் கொண்டிருந்த கடும் போக்குக் காரணமாக இலங்கையில் கத்தோலிக்க விசுவாசம் அழியும் நிலையிருந்தது. அடிகளார் தமது தூய்மையான, தியாகம் நிறைந்த, சேவை மனப்பான்மையான வாழ்வினால், பல ஆபத்துக்கள் மத்தியிலும் துணிவுடன் பணியாற்றினார்.

இறைவழி நடத்தலுக்குத் தம்மை முற்றாகக் கையளித்து, கலையும் நிலையிலிருந்த தியான சம்பிரதாய சபையின் தலைமைப் பொறுப்பையேற்று இச்சபைக்கு புத்துயிர் ஊட்டினார், இச்சபை 150 வருடங்களாக குருமாரை இலங்கைக்கு அனுப்பி எமது திருச்சபையை தொடர்ச்சியாக வழிநடத்தியது.

யோசேவ் வாஸ் அடிகளின் பணிப்புரையில் யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் தமிழ், சிங்கள, ஆசிய மொழிகளைக் கற்று கிறிஸ்தவ இலக்கியங்களை உருவாக்கினார்.

அடிகளாரின்பணிவாழ்விலே எதிர்கொண்ட அனைத்துத் துன்ப துயரங்களிலும், சவால்களிலும் முழுமையாகப் பங்குகொண்டு பக்கபலமாக நின்று பணியாற்றிய ஒரு பொது நிலையினன் ஜோண். இவ்வேளையில் இவரும் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவர்.

இறை பணியில் அடிகளாருக்கிருந்த தணியாத ஆர்வமே இவ்வாறு செயற்படக் காரணமாயிருந்தது இவர் வாழ்வும் பணியும், நற்செய்தி அறிவித்தல் பணியிலும், கிறிஸ்தவ வாழ்விலும் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்கமும், உறுதியுமளிக்கட்டும்.

● அருள்திரு ஞா. பிலேந்திரன்
தலைவர்—யோசேவ் வாஸ் குழு

# யோசேவ் வாஸ் குழு நடாத்திய பேச்சுப்போட்டி முடிவுகள்

முத்திப் பேறு பெற்ற நிலையை முன்னிட்டு யாழ்—மறைமாவட்ட ரீதியில் நடைபெற்ற பேச்சுப் போட்டியின் முடிவுகள் 1995.

கீழ்ப் பிரிவு:

1. ச. சோபனா — மானிப்பாய்
2. இ. யூட் சுபேன் — கரவெட்டி
3. அ. சிறோமி — பேராலயம்

மத்திய பிரிவு:

1. அ. நிக்கோலின்சியா அன்ரனிஷா — பேராலயம்
2. தே. ரியூனி யோபிதா — பருத்தித்துறை
3. அ. அன்ரன் றஜிந்திரன் — மானிப்பாய்

மேற்பிரிவு:

1. A. நிரோஜிகன் — சண்டிலிப்பாய்
2. T. ஸ்ரவின் — பருத்தித்துறை
3. A. யூட் அஞ்சலோ — புனித யுவானியார் ஆலயம் (யாழ்)

● கட்டுரைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும்.

# அணிதிரள்வோம்

பாலர் நாங்கள் ஒன்று கூடிப்
பாட்டிசைப்போமா?
பாட்டிசைப்போமா? — யேசு
பாலன் சபை வளர்ந்துயரத்
தோத்திரிப்போமா?
தோத்திரிப்போமா?

அன்பு நெஞ்சப் பாலகர் நாம்
அணிதிரள்வோமா?
அணிதிரள்வோமா? — சென்று
என்றும் எங்கும் மறைபரப்புப்
பணிபுரிவோமா?
பணிபுரிவோமா?

தேவசுதன் நாமம் புகழ்
திகழ வைப்போமா?
திகழ வைப்போமா? — நிதம்
ஓய்விலாத சேவையாற்றி
ஒளிகொடுப்போமா?
ஒளிகொடுப்போமா?

★ யாழ் ஜெயம்

# இன்றைய சிறுவர் நாளைய மறை போதகர்

★ அருள்திரு மடூசேல் இராசநாயகம்
பதுளை, திருப்பாலசபை இயக்குனர்.

வேதபோதக அப்போஸ்தலத்துவத்தைச் செய்வதற்குத் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறீஸ்தவனுக்கும் கடமையும் உரிமையும் உண்டு. திருமுழுக்கின் மூலம் ஒருவன் இயல்பாகவே இந்த அப்போஸ்தலத்துவத்திற்கு அழைக்கப்படுகிறான் என்று வத்திக்கான் சங்க ஏடுகள் கூடுகின்றன. ஒவ்வொருவரும் தத்தமக்கே உரித்தான முறையில், தங்களது அறிவு, ஆற்றல், அனுபவம், அந்தஸ்து, வாழும் சூழல் ஆகியவற்றிற்கேற்ப அப்போஸ்தலப் பணி புரியவேண்டுமென்றும் சங்கத் தந்தையர் அறிவுறுத்துகின்றனர்.

இதற்கேற்ப சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வளர்ந்தோர் யாவரும் வேதபோதக அப்போஸ்தலத்துவத்தில் ஈடுபடவேண்டும். இங்கு ஒரு கேள்வி எழலாம். சிறுவர்கள் எப்படி வேதபோதக அப்போஸ்தலத்துவத்தில் ஈடுபட முடியும் என்ற வினா விடுக்கப்படலாம். யேசு ஒரு முறை தனது அப்போஸ்தலர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார். ''உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் குழந்தைகளாக மாறாவிடில் விண்ணரசில் நுழைய மாட்டீர்கள். எனவே, குழந்தையைப் போல் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறவன் எவனோ அவனே விண்ணரசில் பெரியவன்'' (மத். 18: 3)

வேதபோதக அப்போஸ்தலத்துவம் என்பது இயேசு

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# போட்டி! போட்டி! போட்டி!

**திருப்பாலர் சபை அங்கத்தவர்களே!**

சரியான விடையை, விரைவாக உடன் அனுப்புக.

1. பாப்பரசரின் வேதபோதக சபைகளின் பெயர்களைத் தருக.
2. திருப்பாலர் சபை எங்கே யாரால் நிறுவப்பட்டது?
3. ''சிறுவர்கள் மனுக்குலத்திற்கு நம்பிக்கையின் அடையாளங்களாக இருக்கிறார்கள்'' என்று யார் எப்போது, எங்கே கூறினார்?
4. திருப்பாலர் சபையின் இலங்கைத் தேசிய இயக்குனர் பெயர் என்ன?
5. அண்மையில் எம் நாட்டிற்கு விஜயம் செய்த கத்தோலிக்க திருச்சபையின் தலைவரின் சொந்தப் பெயர் என்ன?
6. திருப்பாலர் சபை அங்கத்தவர்களின் செயற்பாடுகள் நான்கும் எவை?
7. சிறுவர்களைப்பற்றி இயேசு நற்செய்தியில் கூறியுள்ள இறைவார்த்தைகளை எழுதுக.
8. திருப்பாலர் சபை ஆரம்பிக்கப்பட்ட 150ஆம் ஆண்டு நிறைவு விழா யாழ் மறைமாவட்டத்தில் எப்போது கொண்டாடப்பட்டது.
9. திருப்பாலர் சபையின் இவ்வருடக் கருப்பொருள் என்ன?
10. ஆசாரத்துக்குரிய யோசேவ் வாஸ் முதன் முதல் இலங்கைத் தீவிற்கு வந்தபோது எந்த இடத்தில் வந்திறங்கினார் என்று கூறப்படுகின்றது?

**போட்டி விதிகள்:—**

1. திருப்பாலர் சபை உறுப்பினராக பங்கில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
2. எழுதப்படும் விடைகள் பங்குத்தந்தையினரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
3. முடிவு திகதி 31-03-1995
4. அனுப்பவேண்டிய முகவரி :- இயக்குனர்
திருப்பாலர் சபை
புனித மாட்டின் குருமடம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## மறைந்த அருள்திரு மேரி பஸ்ரியனின்
# நினைவும் தினமும் 06-01-1995

மறைந்த நம் மறைத்திரு மேரி பஸ்ரியன் அடிகளாரின் 10வது ஆண்டு நினைவாகவும், எமது மண்ணின் மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், மறு மலர்ச்சிக்காகவும் வேண்டும் தினமாகவும் கடந்த 06-01-95 வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நாளில் அடிகளாரின் ஆன்ம சாந்திக்காக மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் கென்றி அரசர் கல்லூரியின் அதிபர், அருள் தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் அருள்தந்தையர்கள் S. எட்வின், யோசப் பிரான்சீஸ், எட்மன் மைக்கல் ஆகியோர் இரங்கற் பலியாக கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றி மாணவச் செல்வங்களின் கல்வி மலர்ச்சிக்காகவும் வேண்டிக் கொண்டனர்.

மேற்படி திருப்பலியில் கலந்து கொள்ள இளவாலை கென்றி அரசர் கல்லூரியிலிருந்தும், இளவாலை திருக்குடும்பக் கன்னியர் வித்தியாலயத்திலிருந்தும், மானிப்பாய் புனித அன்னாள் பாடசாலையிலிருந்தும், மாதகல் புனித தோமஸ் பாடசாலையிலிருந்தும் 500க்கு அதிகமான மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும், பஸ்ரியன் கல்வி உதவித் திட்டத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அருள்திரு எட்வின் அடிகள் திருவுரை ஆற்றுகையில் மாணவர்கள் யாவரும் தமது கல்வியைக் கற்பாறையில் கட்டப்பட்ட கட்டடத்திற்கு ஒத்ததாக ஆக்கிக் கொள்ளல் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். கற்பாறையில் கட்டப்பட்ட கட்டடம் எவ்வாறு காற்று, புயல், மழை போன்ற இயற்கை விழைவுகளுக்குத் தாக்குக் கொடுத்து நிமிர்ந்து நிற்கின்றதோ, அவ்வாறே இன்றைய சூழ்நிலைகளில் எமது மாணவ மணிகளைச் சுற்றி வளைக்கும் போர், இடி முழக்கங்கள், சுற்றி வளைப்புக்கள், கொலை கொள்ளைகள் போன்ற செயற்கை அழிவுகளுக்கு ஆட்டி அலைக்கழிக்கப் படுகின்றவைகளாக மாறிவிடாது, அழிவில் ஆக்கத்தை எட்டிப்பிடிப்பவர்களாக, ஏறிச்செல்பவர்களாக மாறவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இத்தகைய தாகத்தைக் கொண்டவராக வாழ்ந்தவரே மறைத்திரு அடிகளாவார். அடிகள் மறைந்தாலும் அவர் பணி மறையவில்லை. தணியாத அவரது தாகத்தை தரணியில் தணித்திடச் செய்யும் கரங்களாக உதித்ததே உதவும் கரங்களான ''பஸ்ரியன் கல்வி உதவித் திட்டம்''. எனவே மாணவ மணிகளே நாளை மலரவிருக்கும் உலகம் உங்கள் கையிலேதான் உள்ளது. மாணவப் பருவத்தை நன்குணர்ந்து காற்றுள்ளபோதே தூற்றிப் பயனடையுங்கள் என வேண்டிக் கொண்டார்.

திருப்பலி முடிவில்''பஸ்ரியன் கல்வி உதவித் திட்டத்தினால்'' நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளுக்கான பெறுபேறுகள் குழுவின் செயலர் திரு. ஸ்ரனிஸ்லாஸ் (B. A. St. Patrick's College, Jaffna) அவர்களால் வாசிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து குழு அங்கத்தவர் திருவாளர் செபநாயகம் அவர்களால், இந்நாளை செவ்வனே நிறைவு செய்ய வழி சமைத்துக் கொடுத்த மானிப்பாய் பங்குத் தந்தை யாவிஸ் அடிகளாருக்கும், பலி நிறைவேற்றிய குருக்கள், இதற்கு சமூகமளித்த அருள் சகோதரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் இதில் பங்குபற்றிய சகலருக்கும் நன்றி தெரிவித்தார்.

செயலர்
BEAS

## அருள்திரு மேரி பஸ்ரியன் அடிகளாரின் 10வது மறைவு தினத்தை யொட்டிய போட்டி முடிவுகள்

மறைந்த மறைத்திரு மேரி பஸ்ரியன் கல்வி உதவித் திட்டத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப்போட்டிகளுக்கான முடிவுகள் :

### ஆண்டுகள் : 12 — 13

கட்டுரை : புதுப்பிக்கும் திருச்சபையில் மாணவரின் பங்கு.
முதலாம் பரிசு : — அ. அன்ரன் அருள்ராஜ் ( Y 12 ) புதுக்குடியிருப்பு
1. ம. ஜஸ்மின் சுகந்தி குரூஸ் — பேசாலை
2. C. சுபத்திரா — அரியாலை
3. J. யூடின் கிளையிமென்ற் பீரிஸ் — பேசாலை
4. S. கிளையிமென்ட் — பேசாலை
5. லூ. எமறின் சுதர்சினி — நவாந்துறை

கவிதை : உரிமையின்றி வாழ்வா?
முதலாம் பரிசு : — அ. அன்ரன் அருள்ராஜ் — புதுக்குடியிருப்பு
1. யோகவதி அந்தோனி — கருங்கண்டல் — அடம்பன்
2. ம. ஜஸ்மின் சுகந்தி குரூஸ் — பேசாலை
3. மா, டெல்சியா டயஸ் — பேசாலை
4. பி. நிக்கலின் செல்வி குரூஸ் — பேசாலை
5. லூ. மெறின் சுதர்சினி — நாவாந்துறை

### ஆண்டுகள் — 9, 10, 11

கட்டுரை : — கிறிஸ்தவர்களின் புதுப்பித்தலில் இறைவார்த்தையின் பங்கு.
முதலாம் பரிசு : — யூடியா அருள்ராஜா — அரியாலை
1. நிலானி பெனடிக்ற் — O. L. R.
2. லூசியன் ஸ்ரீபனா சுபோதினி — நாவாந்துறை
3. கிறிஸ்ரீனா பஸ்ரியாம்பிள்ளை — பண்டியந்தாழ்வு
4. அலோசியஸ் கலிஸ்ரன் அனோஜன் — O. L. R.
5. சி. மேரிக்கிறேஸ் தாளையடி (குடாரப்பு)

கவிதை : — பகிர்தலின்றிக் கிறீஸ்தவமா?
முதலாம் பரிசு : — லூசியன் ஸ்ரீபனா சுபோதினி — நாவாந்துறை
1. மேரி ஸ்ரெலா — நாவாந்துறை
2. மரி சுதன் — நாவாந்துறை
3. தீபனா — நாவாந்துறை
4. ஜெபதாசன் — நாவாந்துறை
5. றொஷாந்தினி குலாஸ் — பேசாலை

### ஆண்டுகள் — 6, 7, 8

கட்டுரை : — மாணவர் வாழ்வில் மிளிரவேண்டிய கிறிஸ்தவப் பண்புகள்.
முதலாம் பரிசு : — லெ. அஜீத் லெம்பேர்ட் — பேசாலை
1. சிறியாந்தி — O. L. R.
2. கி. கமல் ராஜ் — நாவாந்துறை
3. அ. பத்மநாத் — நாவாந்துறை
4. லூ. யேசுநேசன் — நாவாந்துறை
5. அ. பிரட்லி சிகான் — O. L. R.

கவிதை : — '' கல்வி தரும் கனி ''
முதலாம் பரிசு : — தி. ஜோண் கிங்ஸ்லி — உயிலங்குளம்
1. பி. அன்ரனி நிக்சன் குரூஸ் — பேசாலை
2. ச. சிறியாந்தி — O. L. R.
3. ச. செரின் — O. L. R.
4. அ. அனற்மேரி லெம்பேட் — அரிப்புத்துறை
5. கி. கமல்ராஜ் — நாவாந்துறை

● குறிப்பு : — பரிசில்கள் பங்குத்தந்தையர்களினூடாக அனுப்பி வைக்கப்படும்.

(செயலர்)
BEAS

| நற்செய்தி படிப்போம் | 13 |
|---|---|

## இயேசுவின் அதிகாரபோதனை ஆர்வமிகு பதில் (சென்ற இதழ் தொடர்ச்சி)

தலைமைக் குருக்களையும், மறைநூல் அறிஞரையும் இயேசு தம் வார்த்தைகளால் தலை குனியவைத்தது மட்டுமல்ல, தமக்கு அவர்களால் ஏற்படப்போகின்ற அவமானமான மரணத்தை அணுவும் பிசகாமல் 'கொடிய குத்தகைக்காரர்' உவமைமூலம் அவர்கள் முன் அம்பலமாக்குகின்றார் அண்ணல் இயேசு (12/1-12)

ஒருவன் திராட்சைத் தோட்டம் ஒன்றைச் சீராக அமைத்து அதைக் குடியானவர்களிடம் குத்தகைக்கு விட்டு வெளியூர் சென்று திரும்பி வந்தான். தோட்டத்துப்பலனில் தன் பங்கை வாங்கி வரும்படி தன் ஊழியர்களை அனுப்பிய வேளையில், ஒருவனை அடித்து வெறுங்கையாய் அனுப்பினர், மற்றவனைத் தலையில் அடித்து இழிவு படுத்தினர், இன்னும் சிலரை அடித்தும், சிலரைக் கொன்றும் போட்டனர்-இறுதியில் சொந்த மகனை அனுப்பிய வேளையிலும், கொஞ்சமாவது அஞ்சிடாமல், சொத்தனைத்தையும் தம் பரம்பரைச்சொத்தாக அனுபவிக்க அபிலாசை கொண்ட எத்தர்கள். அவனைப்பிடித்து திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே கொன்று விட்டு அக்களிப்பின் தைலத்தால் தங்களை அபிசேகம் செய்து நின்றார்கள். ஆனால் தோட்டத்திற்குரியவன் என்ன செய்வான்?குடியானவர்களைக் குடிபெயர்த்தொழித்துக் குறுமதி படைத்தவர்களையல்ல, குணசீலர்களையே குடியமர்த்துவான்.

''கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக் கல்லாய் அமைந்தது. ஆண்டவர் செயலிது. நம்கண்ணுக்கு வியப்பே'' என்று மறைநூலில் நீங்கள் படிக்கவில்லையா? என மறைநூல் வற்பன்னர்களையும் தலைமைக்குருக்களையும் இயேசு வினாவிய பொழுது, தங்களின் உள்ளக்கிடக்கையை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுகின்றாரே என்ற ஆத்திரத்தில் இதுவரை நடந்த மோதல்களில் அவரைத் தொலைக்க வழி தேடியவர்கள் இப்போ அவரைப் பிடிக்கவும் முற்பட்டனர், ஆனால் பொத்துக்கொண்டுவந்த கோபத்தைப் பொத்திக் கொண்டு பொதுமக்களுக்கு அஞ்சி அப்புறமாகப் போயும் விட்டார்கள்.

ஆலயத்திலே தமக்குக் கிடைத்த நிரந்தர வருமானத்தை இல்லாது ஒழித்தது மட்டுமல்ல, தங்களின் ஆனந்தமான வாழ்வையும் குத்திக் காட்டுகின்றாரே என அவர்கள் நெஞ்சம் குறுகுறுக்க, அவரை அவருடைய பேச்சிலேயென்றாலும் சிக்கவைத்து தங்களின் காரியத்தைக் கச்சிதமாகச் சாதிக்க முற்பட்ட சதுசேயரும், மறைநூலறிஞரும்; பரிசேயர். ஏரோதியர் சிலரை அவரிடம் அனுப்புகின்றார்கள். அனுப்பப்பட்டவர்களோ நயமான வார்த்தைகளால் தங்களின் நச்சுவலைக்குள் அவரை வீழ்த்த, அனுப்பியவர்களுக்குத் துணைபோக, ஆதங்கமான வார்த்தைகளை அள்ளி வீசுகின்றார்கள். ''போதகரே! நீர் உண்மையுள்ளவர். எவர் தயவும் உமக்கு வேண்டியதில்லை, ஏனெனில் முகத்தாட்சணியம் பாராமல், கடவுளின் வழியை உண்மைக்கேற்ப போதிக்கிறீர் என்று எங்களுக்குத் தெரியும். செசாருக்கு வரி கொடுப்பது முறையா? இல்லையா? கொடுக்க வேண்டுமா? வேண்டாமா? என்றார்கள். எக்கச்சக்கமான கேள்வி கொடுக்கவேண்டுமென்றால்.... இவன் உரோமையர்களின் அடிவருடி எனக் கூறி மக்களைக் கிளர்ந்தெழச் செய்யலாம். கொடுக்க வேண்டாமென்றால் தேசத்துரோகி எனப்பட்டம் சூட்டி தேசத்தை விட்டே தொலைக்கலாம். இரண்டில் ஒன்று!...நீ என்னிடம் சொல்லு'' எம்மை விட்டு வேறு யாரு உன்னைத் தொலைப்பார் என்ற இறுமாப்பில் நெற்றிப் புருவத்தையும் நெகிழச் சுருக்கிய நிலையில் நிமிர்ந்து அவரை நோக்குகின்றார்கள் அனுப்பப்பட்டவர்கள். தம்மை நாடிவந்தவர்களை நாடிபிடித்துப்பார்த்தல்ல, அவர்களின் நாரிப் பிடிப்பை, உள்ளக்கிடக்கையை கபடத்தை அறிந்த இயேசு தெளிவான குரலில், ''ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்?

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-86

**அடைக்கலம்:** சமாதானம் சமாதானம் எண்டு எல்லோரும் சொல்லினம்.அது வாறதா காணேல்லயே அண்ணே!

**குருசுமுத்து:** அது என்ன தம்பி, நிவாரணப்பொருள் மாதிரி கப்பலில கடலில வாறதெண்டுபாத்திருக்கிறியளே?

**அடைக்கலம்:** அவைதானே அண்ணே சமாதானத்துக்கு வரவேணும்.

**குருசுமுத்து:** தாரு வந்தாலும் தம்பி எங்கட பங்களிப்பும் என்ன எண்டு உணரவேணும் பாரு தம்பி.

**அடைக்கலம்:** அதுக்கு நாங்க என்ன அண்ணே செய்ய முடியும்?

**குருசுமுத்து:** நாங்களும் சமாதானத்தின் கருவியாக மாறவேணும். ஒரு கை தட்டி ஓசைவராது. கரம் பற்றி கைகுலுக்க இருகரமும் இணைய வேண்டும். வீட்டில, சூழலில, சமூகத்தில சமாதானம் மலர நாட்டில அது தானா வரும். அதுக்கு பகைவரிடத்திலும் அன்பைப் பகிரவேணும் பாரு.

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-10

சமயக் காட்சிகள் எதுவும் ஒளி ஒலிக் காட்சியில் வரக்கூடாது என சட்டம் இயற்றிய அரசு, கருதினால் வொய்ரிலா திருத்தந்தையானதும் தனது சட்டத்தை தானே வாபஸ் பெற்று பாப்பரசரின் பதவி ஏற்பு வைபவம் முதல், சமய நிகழ்ச்சிகளும் ஒலிபரப்ப அனுமதி வழங்கியது.

கிராக்கோ நகருக்கு அருகில் கல்வாரியாத் திருத்தலம் இருந்தது. கருதினால் வொய்ரிலா நெருக்கடியான காலத்திலும் மனச்சோர்வான நேரத்திலும், அங்குபோய்ச் செபம் செய்வது வழக்கம்.

ஒரு சிறிய குன்றின் உச்சியில் அழகிய பள்ளத்தாக்கிற்கு அருகில் அமைந்துள்ள இந்த யாத்திரைத் தலத்திற்கு அவர் அடிக்கடி பக்தர்களை அழைத்துச் செல்வதும் வழக்கம். கால்களில் சப்பாத்து, ஒரு கரத்தில் குடை, மறு கரத்தில் செபமாலை, பனிக்கட்டிகளை விலக்கிச் செல்ல தடிக்கம்பு ஆகியவற்றுடன் இன்பநேரங்களிலும் துன்ப நேரங்களிலும் கருதினால் வொய்ரில்லாவிற்கு அக்கல்வாரியே ஒரு சரணாலயமாகும்.

1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் சின்னப்பர் இறந்த போது இந்தத் தலத்திற்குத் தான் வொய்ரிலா சென்று செபம் செய்தார். பின் உரோமாபுரிக்குச் சென்று தேர்தலிலே கலந்துகொண்டார்.

65 வயதான கருதினால் அல்பினோ லூசியானி 8மணி நேர ஆலோசனைக்குப் பின் தெரிவுசெய்யப்பட்டார்.

23ஆம் அருளப்பர், 6ஆம் சின்னப்பர் என்ற தம் முன்னைய பாப்பரசர்களின் பெயரை இணைத்து 1ஆம் அருளப்பர் சின்னப்பர் என்று பெயர்சூட்டிக் கொண்டார். புன்னகை மன்னன் — என்று எல்லோரும் அவரை அன்பாக அழைத்தனர்.

கருதினால் வொய்ரிலா மீண்டும் தம் பணிகளைத் தொடர தாய்நாடு வந்தார். வருவதற்கு முன் பாப்பரசரை வாழ்த்தி முழந்தாட்படியிட்டு ஆசீர் பெற்றார். இன்னும் 30 நாட்களில் தான் புதிய பாப்பரசராக வரப்போவதை அவர் அப்போ அறிந்திருக்கவில்லை.

பாப்பரசர் 1ஆம் அருளப்பர் சின்னப்பர் வழமைபோல் அன்றும் மகிழ்ச்சியாக இருந்தார். இரவுவேளைச் செபத்திற்குப் போனார். இரவு உறங்குவதற்கு வரும்போது பின்வரும் செய்தியை அலுவலகத்தினர் அவரிடம் தெரிவித்தனர். ''உரோம் நகரில் வலதுசாரிக் கட்சியைச் சேர்ந்த சில தீவிரவாதிகள் ஒரு கம்யூனிஸ்ட் இளைஞனைச் சுட்டுக்கொன்றுவிட்டனர்''.

''ஐயோ இளைஞர் கூடவா ஒருவரை ஒருவர் கொன்று தீர்க்கின்றனர்''. ஏக்கத்துடன் வருத்தமாக அவர் சொன்ன வார்த்தைகள் இவை. இவை தான் இறுதிவார்த்தைகள் என யாரும் அப்போ நினைத்திருக்க நியாயம் இல்லை.

மறுநாள் அதிகாலைப் பொழுது மெதுவாகவிடிந்தது. உரோமை நகர் விழித்துக் கொண்டது. வத்திக்கான் மாளிகை வெளிச்சமாகவே இருந்தது. ஆனால் விழித்துக் கொள்ள வில்லை.

பாப்பரசர் திருப்பலிக்கு வரவில்லை. உள்ளே போய்ப் பார்த்த போது அறையில் விளக்குகள் எரிந்து கொண்டே இருந்தன. படுக்கையில் ''கிறிஸ்துநாதர் அனுசாரம்'' என்ற புத்தகம் விரித்துக்கிடந்தது. பாப்பரசர் படுக்கையிலே இன்னுமிருந்தார். டாக்டர்கள் வரவழைக்கப்பட்டபோது அவர்கள் சொன்ன செய்தி எல்லோரையும், வத்திக்கான் மாளிகையையும் அதிர்ச்சிப்படுத்தியது.

பாப்பரசர் இறந்துவிட்டார்.

(வளரும்)

## காவலன்

நல்ல நல்ல மணிகள் பல சேர்ந்திருக்கும் காவலன்
நான் படிக்கும் காவலன் என் வாழ்வின் பாதுகாவலன்
என்னை அறிஞர் (இறைவனில்) ஆக்கவே எனக்குதவும் காவலன்
பயனைத்தரும் பாடங்கள் பலதும் நிறைந்த பாதுகாவலன்.

அருமைமிக்க கதைகளை அதிகம் தரும் காவலன்
மறந்தும்கூடக் கெட்டதை மறைத்து தராக்காவலன்
நல்லவனாய் வாழவே நாளும் தூண்டும் காவலன்
வல்லவனாய் வாழவே வழியைக் காட்டும் பாதுகாவலன்.

மண்ணின் உயர்வை மதிக்கவே உவகை அளிக்கும் காவலன்
விண்ணில் வாழும் இறைவனை துதிக்கச் செய்யும் காவலன்
கண்ணின் மணி போலவே எம்மைக் காக்கும் காவலன்
விண்ணை நாம் சேரவே எம்மை ஏற்றும் பாதுகாவலன்.

ஆக்கம்— அ. ரொனிறூலஸ், ஆண்டு 6
சென். யோண்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி.

## வங்காலையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருள்திரு. கிறிஸ்ரியன் வாஸ் அடிகள் மறையுரை ஆற்றுகையில் சிறுவயதிலிருந்து தன்னுடன் பழகிய பாசத்தினால் அவரில் காணப்பட்ட சிறந்த பண்புகளை அன்பு, பகிர்வு, சகோதரத்துவம், நீதியில் தாகம் இவைகளை எடுத்துக் கூறி கிறிஸ்துவுக்கு உண்மைச் சாட்சியாக வாழ்ந்தமையால் உயிர்பதைக்க பலியாக்கப்பட்டார் எனக் கூறினார்.

V. A. லெம்பேட்

## நற்செய்தி...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வெள்ளிக்காசை என்னிடம் கொண்டு வாருங்கள் நான் பார்க்க வேண்டும்'' என்றார். அவர்கள் கொண்டு வந்தார்கள். ''இவ்வுருவமும் எழுத்தும் யாருடையவை?'' என்றார். செசாருடையவை என்றனர். இயேசு!.. ''செசாருடையதைச் செசாருக்கும் கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்;'' அதாவது செசாருக்குரிய வெள்ளிக்காசை வரியாகக் கொடுப்பது தவறாகாது. நீதியானதைக் கட்ட கடமையும் உண்டு. அத்தோடு இறைவன் காரியங்களையும் குறையற நிறைவேற்ற வேண்டும் என அவர் குறிப்பிட்டு அதே நேரத்தில் வேகத்துடனும், விவேகத்துடனும் பதிலளிப்பதைக் கண்டு பேச்சிலே சிக்கவைக்க வந்தவர்கள் மூக்குத் திணறிய நிலையில் கை கட்டி, வாய் பொத்தி வியப்படைந்தபோது மௌனத்திலே அவர்களின் மனச்சாட்சி விளையாடி நின்றது...

(வளரும்)

● S. அந்தோனிப்பிள்ளை
மறை ஆசிரியர்

## 31ஆம் நாள் நினைவு



அரியரட்ணம் மேரி மக்டலீன்
(மலர்)
அன்னைமடியில்
12–04–1928
விண்ணக வழியில்
21–01–1995

சீவியத்தில் இவரை நேசித்தவர்களே! இவரின் ஆன்ம ஈடேற்றத்திற்காகச் செபியுங்கள்.

ஆத்மாவுக்குள்ளே உங்களை
சுமக்கும் பிள்ளைகள்
செல்வராணி சுபேந்திரன்
டொறின் மன்மதநாயகம்
ஆபிரகாம் லிங்கன்
''கனகராஜா வில்லா''
தபாற் கந்தோரடி
நெல்லியடி,
கரவெட்டி. A/10/95

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 9 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: 4 | எம் வாழ்வின் வழி யேசு |

## வளரும் பயிர்

சாதாரணமாக, பிள்ளைகள் வெளிவேடிக்கைகள் விளையாட்டுக்களில் தங்கள் நேரத்தைச் செலவழிப்பது வழக்கம். ஆனால் 1651ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21ஆம் திகதி பிறந்த புத்திரனோ சிறுவனாக இருக்கும்போது அயலார் வறியவர் மீது தயவு காட்டுவதிலே அதிக பிரியமாக இருந்தான் வளரும் பயிரை வளமுடன் வளரச் செய்ய இறை பராமரிப்பு அவசியம். உணவு உண்ணும் நேரத்தின் போது வறியவர் யாரேனும் வாசலருகே வந்துவிட்டால் உடனே தனது உணவின் ஒரு பகுதியை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பான் இவ்வித பிறரன்பு மிக்க பிஞ்சுமனம் யாருடையது? கண்காணாத கடவுளைக் கண்டு இறையன்பில் ஊறி, இலங்கைத் திருச்சபையின் இன்னல்மிக்க வரலாற்றில், இறையேசுவை நிலைநிறுத்திய பெருந்தகை யார்?

அன்புக்கண்மணிகாள்!

உங்கள் உள்ளம் உடனே முத்திப்பேறுபெற்ற யோசேவ் வாஸ் அடிகள் என அடித்துக் கூறியிருக்கும், 21–1–95இன் காட்சி படமாக வந்திருக்கும்.

மனமாற்றத்தின் காலம், செபத்தின் காலம், தவத்தின் காலம், உங்களுக்குத் தரப்படும் பொன்னான காலம்.

நல் மனத்துடன் நல்லவைகளைச் செய்து இறையேசுவுடன் ஒன்றித்து வாழ வாழ்த்தும்,

அன்பின். அன்பு விழி

வாசித்து தியானிக்க, தொபியாசு 4: 7–12

ஆசிரியருக்குக் கடிதம்

## நாட்டுக் கூத்துப் போட்டி

கடந்த வருடம் புரட்டாதி மாதம் இரண்டாம் திகதி வெளிவந்த பாதுகாவலன் பத்திரிகையில், ஆசிரியருக்குக் கடிதம் எனும் பகுதியில், திருமறைக் கலாமன்றம் நடத்திய நாட்டுக் கூத்துப் போட்டி பற்றிய கருத்துக்களைத் தாங்கி வெளிவந்த கடிதத்திற்கு பதில் கூறுமுகமாக நாம் தெரிவிக்க விரும்புவது யாதெனில், போட்டி விதிகளில் கூறப்பட்டவாறு மத்தியஸ்தர்களின் தீர்ப்பே, முடிவானதும். இறுதியானதுமாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. நாட்டுக் கூத்துக் கலையை நன்கு அறிந்த வித்தகர்களே மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். அன்றைய பரிசளிப்பு நிகழ்ச்சியின் பொழுது இவ்வாறான ஆட்சேபனையோ, விமர்சனமோ, எதிர்ப்போ எதுவுமின்றியே சம்பந்தப்பட்டவர்கள்பரிசினை ஏற்றுக் கொண்டனர். மாறுபட்ட இரசனையும், முரண்பாடான விமர்சனமும், திருப்தி காணா மனநிலையும், நிறைந்ததே கலையுலகம் அங்கே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சகஜமானவை. எது எவ்வாறாக இருப்பினும் போட்டி முடிவுகளைப் பற்றிய மத்தியஸ்தர்களுடைய விளக்கமும், கூத்துக்கள் பற்றிய குறிப்புகளும் கொடுக்கப்படக்கூடிய கருத்தரங்கு ஒன்றினை போட்டியில் கலந்து கொண்ட அனைவரையும் அழைத்து நடத்த வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம். ஆனால் துர் அதிஷ்டவசமாக மத்தியஸ்தர்களுக்கு தலைமை தாங்கியவர் பல மாதங்களாக யாழ்ப்பாணத்தில் இல்லாதிருக்கின்றமையால் அவரது வருகையை எதிர்பார்த்திருக்கின்றோம்.

இயக்குனர்
திருமறைக்கலாமன்றம்.

## இன்றைய...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் விண்ணரசைக் கட்டி எழுப்புவதாகும். உண்மையாகவே குழந்தைகளின் வாழ்வின் இறையரசின் பெறுமதிகள் வெளிப்படுவதை நாம் காண முடியும். குழந்தைகளின் உள்ளம கள்ளமில்லா உள்ளம் அவர்களது நெஞ்சம் வஞ்சகமில்லா நெஞ்சம். இந்த உள்ளங்களில், உண்மை, அன்பு, மன்னிப்பு, பகிர்தல், சமத்துவம் சகோதரத்துவம் போன்ற பண்புகள் இருக்கின்றன. இவை இறையரசின் பண்புகள். ஆகவே குழந்தைகள் தங்கள் வாழ்க்கையாலேயே இறையரசைப் போதிக்கிறார்கள். ஆகவே வேதபோதக அலுவலை அவர்கள் அறியாமலேயே செய்கிறார்கள். உண்மையில் குழந்தைகளைப்போல் நாமும் மாறினால் வேதபோதக அலுவல் செய்ய முடியும்.

சிறந்த மறைபோதகர்கள் சிறுவர்களாக இருந்துதான் வளர்ந்து ஆண்டவன் அழைப்பை ஏற்றவர்கள். ஆசாரத்துக்குரிய யோசேவ் வாஸ் அடிகள் ஒரு சிறந்த உதாரணம். சிறுவனாக இருக்கும் போதே செபிப்பதில் இன்பம் கண்டவர். ஏழைகள் மேல் இரக்கமும் அன்பும் கொண்டவர். பாடசாலையில் ஓர் முன்மாதிரிகையான வாழ்வு வாழ்ந்தவர். இப்பருவத்தில் தான் அவருடைய வேத போதக அலுவல் முளைவிட்டது. ஆகவே இன்றைய சிறுவர்கள் தான நாளைய வேத போதகர்கள்.

தேவ அழைத்தல்கள் அவர்களிடமிருந்தே வரவேண்டும். இதற்காகப் பிள்ளைகள் ஆயத்தப் படுத்தப்படவேண்டும்.

முத்திப்பேறுபெற்ற யோசேவ் வாஸ் அடிகளின்

## நினைவுச் சின்னம்

முத்திப்பேறுபெற்ற யோசேவ் வாஸ் அடிகளாரின் நினைவுச் சின்னமொன்று அவர் முதன் முதலில் காலடி பதித்த கொழும்புத்துறை துறைமுகத்துக்கு அருகாமையில் நிறுவப்பட்டு வருகின்றது. இதனை யாழ். ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் வருகிற 23ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு திறந்து வைப்பார்.

# சர்வதேச சமுதாயம் மௌனமே காட்டியுள்ளது

* ஆயர்கள் அறிக்கை

அநீதி, வன்முறை, அழிவு சித்திரவதை மற்றும் கொலைகளால் துன்பங்களை அனுபவித்துவரும் போர்ணியா எக்ஸிகோணியா மக்கள் குறித்து சர்வதேச சமுதாயம் இதுவரை பாராமுகமாகவே இருந்தது எனக்குற்றம் சாட்டியுள்ளனர் அக்குடியரசின் ஆயர்கள்.

வலிமை குன்றிய அப்பகுதியின் மக்கள் வலிமையுடையோரின் அடக்குமுறைகளால் துன்பங்களை அனுபவித்த போதும் சர்வதேச சமுதாயம் மௌனமே காட்டியுள்ளது எனக்கூறும் ஆயர்களின் அறிக்கை துன்புறும் மக்களின் நலனுக்காகப்பாடுபடுவதை விட சர்வதேச சமுதாயத்தின் அரசியல் கௌரவம் தெளிவாக நோக்கப்படுவது குறித்து தன் கவலையை வெளியிட்டுள்ளது.

பலவீனமுள்ள மனிதனைத் தீமையிலிருந்து விடுவிக்க போதைப்பொருட்களுக்கெதிரான அமைப்புக்கள் குற்றங்களுக்கெதிரான நிறுவனங்கள், மற்றும் கருக்கலைத்தல், பாலுணர்வைத் தூண்டும் இலக்கியங்களுக்கெதிரான நடவடிக்கைகள் போன்றவைகள் மூலம் செயற்பட்டுவரும் சர்வதேச சமுதாயம் போர்ணியாவில் அப்பாவி மக்களைக் காப்பாற்றத் தவறியதைக் குறித்தும் ஆயர்கள் தங்கள் அறிக்கையில் கேள்விவிடுத்துள்ளனர். துன்புறும் மக்களுக்கு உதவுபவர்கள் மற்றும் அவர்களோடு ஒருமைப்பாட்டைத் தெரிவிப்பவர்களுக்கும் தங்கள் நன்றியை வெளியிட்டுள்ளனர் ஆயர்கள்.

## 2000 யூபிலி ...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தலத் திருச்சபைகளின் உயிர்த்துடிப்பைக் காட்டுகின்றது. முதல் நூற்றாண்டுகளிலும், முதல் சகாப்தத்திலும் இருந்ததை விட இன்று இத் திருச்சபைகளின் எண்ணிக்கை மிக அதிகரித்துள்ளது. வெவ்வேறு வகைப்பட்ட கிறிஸ்தவ அழைத்தல்களின் வழியாக கிறிஸ்துவைப் பின்பற்றிய பல்வேறு இனங்களையும் மொழிகளையும் சார்ந்த மக்களிடம் காணப்படும் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய புண்ணியங்களின் வழியாக மீட்பரின் முழு வல்லமையுள்ள பிரசன்னத்தை வெளிப்படுத்துவதே மூன்றாவது சகாப்தத்தின் ஆரம்பத்தில் சகல திருச்சபைகளும் கிறிஸ்துவுக்கு அளிக்கக்கூடிய மாபெரும் வணக்கமாகும்.

2000வது ஆண்டுகளுக்கு ஆயத்தமாக, அனைத்துலக திருச்சபைக்காக வேதசாட்சிகளின்வரலாற்றினை மீளமைப்பது பரிசுத்த பீடத்தின் பணியாகும். இதைச் செய்யும் போது, எமது சமகாலத்தில் கிறிஸ்துவின் உண்மைக்கு முழுமையான சான்றாக வாழ்ந்தவர்களின் பரிசுத்த தனமும் கவனத்திற்கெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, திருமணத்தில் தமது கிறிஸ்தவ அழைத்தலை வாழ்ந்த ஆண்கள், பெண்களின் வீரத்துவம் பொருந்திய புண்ணியங்களை இனங்காண வேண்டும். விவாக நிலையில் பரிசுத்த தனத்தின் கனிகள் ஏராளமாக உண்டென நாம் நன்குணர்ந்ததாலேயே, அவற்றைப் பகுத்துணர்ந்து, ஏனைய கிறிஸ்தவ குடும்பங்களுக்கு ஊக்கமளிக்கும் முன்மாதிரியாக முழுத்திருச்சபைக்கும் முன்வைப்பதற்கு பொருத்தமானவழிவகைகளைக் கண்டு பிடிப்பது அவசியமாகின்றது.

(வளரும்)

சமூகத் தொடர்புகளுக்கான செய்தி

# அமைதி, சகிப்புத்தன்மைக்காக உழைக்கவேண்டும்

உலகில் உடனடியாகத் தேவைப்படும் அமைதி மற்றும் சகிப்புத்தன்மைக்குத் திரைப்படத் துறைக்குப் பொறுப்பானவர்கள் உழைக்க வேண்டுமென்று விண்ணப்பித்துள்ளார் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்.

திரைப்படம் கலாசாரம் மற்றும் மதிப்பீடுகளின் தொடர்பாளர் என்ற தலைப்பில் இவ்வாண்டு மே 28ஆம் திகதி சிறப்பிக்கப்படும் 29வது சமூகத் தொடர்பு நாளுக்கென செய்தி வெளியிட்டுள்ள திருத்தந்தை இவ்வாறு விண்ணப்பித்தார்.

திரைப்படத்துறையில் பணிபுரிவோர் சமூகத் தொடர்பாளர்களாக உரையாடலுக்கும், தங்களைச் சுற்றியுள்ள சூழலின் உண்மைத் தன்மைக்கும் திறந்த மனம் கொண்டவர்களாகச் செயல்படவேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ள திருத்தந்தை திரைப்படங்கள் மனித மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுவதாய் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். திரைப்படங்களைப்பார்ப்பவர்களுக்கு அவை பற்றிய கல்வி அறிவைப்புகட்ட வேண்டுமென்றும் கூறியுள்ள வேளை கிறிஸ்தவர்களுக்கு திரைப்படம் சக்தி வாய்ந்த நற்செய்திப்பணியின் சாதனமாக மாறமுடியும் என்பதையும் கோடிட்டு காட்டியுள்ளார் திருத்தந்தை.

## திருப்பாலர் சபைத்தினம்

**26-02-1995**

**திருப்பாலர் சபையின்**
**1995ஆம் ஆண்டுக்கான**
**கருப்பொருள்**

**"யேசுவின் மறை தூதர்கள் நாம் யோசேவ் வாஸ் அடிகளாரைப் பின்பற்றுவோம்"**

**1995**

**சர்வதேச சகிப்புத்தன்மை ஆண்டு**

**"ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்வோம்"**

# புதிய சட்டத்திற்கு எதிராகப் போர்!

சூடானில் கொண்டு வரப்பட்டுள்ள மறைப்பணி அமைப்புகள் குறித்த புதிய சட்டத்தால் கிறிஸ்தவ சபைகள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருப்பதாக செய்தி நிறுவனம் அறிவிக்கின்றது.

1962ஆம் வருடம் கொண்டு வரப்பட்ட சட்டந்திற்குப் பதிலாக தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம் கிறிஸ்துவ சபைகளை தன்னார்வப்பணி அமைப்புகளாகப் பதிவு செய்வதுடன் அவைகளின் மீதான கட்டுப்பாட்டு அதிகாரத்தையும் அரசுக்கு வழங்குகின்றது. புதிய சட்டம் கிறிஸ்துவ சபைகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், அவைகளின் பதிவை அகற்றவும், உடமைகளைக் கைப்பற்றவும் அது தொடர்புடைய அரசு அமைச்சருக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையின் மறைபரப்புப் பணிக்கான கட்டுப்பாடாக எதிர்நோக்கும் தலத் திருச்சபை அரசோடு தன்னைப் பதிவு செய்யும் சட்டத்தை எதிர்த்துப் போரிட முடிவு செய்துள்ளது.

சூடானின் கிறிஸ்தவ சபைகளின் அவையும் அரசின் இப் புதிய சட்டத்திற்கெதிராகத் தன் குரலை எழுப்பியுள்ளது.

## கற்கோவளத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அதிகமாக வாழும் இப் பகுதியில் கிறீஸ்தவ விழுமியங்களைக் கொண்ட விவிலிய செய்தியினை கொண்ட நாடகங்கள் மேடையேற்றப்பட்டது ஒரு மறைபரப்புப் பணியாகும். அன்று திருமறைக்கலா மன்றத்தினரின் விவிலிய நாடக வரிசையிலான 12வது வெளியீடான ''பாலைவனப் புதல்வர்கள்', என்னும் புத்தகம் வெளியிடப்பட்டது. அப்புத்தகம் பற்றிய அறிமுக உரையை மறை ஆசிரியர் இ. ம. ஜெயசீலன் வழங்கினார். திருமறைக் கலாமன்ற செயலர் வி. ஜே. கொண்சன்ரைன் சிறப்புரை வழங்கினார்.

மேலும் அதே மேடையில் திருமறைக்காலமன்ற இயக்குனர் அருள்திரு நீ. மரிய சேவியர் அடிகளார் திருச்சபை தந்த கலைச் செல்வன் என்று பெருமைப்படுத்தப்பட்டு பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரும், பருத்தித்துறைப் பங்குத் தந்தையுமான அருள் திரு பி.எம். இம்மானுவல் அடிகளாரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

ம. பிரதீபன்

## யாழ் ஆயர் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எம். சாந்தகுணசிங்கம், செல்வி டபிள்யூ டில்ஷாந்தி, திரு. பி. எட்வேட் ஹென்றி என்பவர்கள் முறையே தலைவர், செயலர், பொருளாளராகவும், திரு. விகோரியான் பதிப்பாசிரியராகவும் தெரிவானார்கள்.

தொடர்ந்து செயற்குழு உறுப்பினர் அனைவரும் தெரிவாகினர், தெரிவுகள் அனைத்தும் ஒருமனதாகவே அமைந்தன.

டபிள்யூ டில்ஷாந்தி

## அருள்சகோ. நிர்மலா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊக்குவிப்பாளர்கள் செபவாழ்வில் ஈடுபடுபவர்களாகவும் இறைவார்த்தையைத் தியானிப்பவர்களாகவும் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன், ''ஊக்குவிப்பாளர்கள் சிறுவர்களைத் தாங்கும் உதரங்கள்'' என அன்னை திரேசா அவர்களின் கூற்றை மேற்கோள்காட்டி உச்சாகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

கடந்த டிசம்பர்மாத இறுதியில் மேற்கொண்ட அருள் சகோதரி நிர்மலா அவர்களின் யாழ். வருகையானது கடந்த நான்கு ஆண்டுகளின் பின் மீண்டும் தேசிய நடுநிலையத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாக அமைந்தது. அருள்சகோதரி அவர்களின் பலநாட் கனவு நிறைவேறியது என்றே கூறலாம். பருத்தித்துறை, மானிப்பாய், மிருசுவில், நாவாந்துறை ஆகிய பகுதிகளில் திருப்பாலர்சபை சிறுவர்களைச் சந்தித்து அறிவுரைகள் வழங்கி ஊக்கமூட்டினார்கள். இப்பங்குகளில் யாழ் மறைமாவட்ட இயக்குனர் அருள்தந்தை றெஜி இராசேஸ்வரன் அடிகளாரால் சிறுவர்களுக்கான திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. தகுதி காணப்பட்ட அங்கத்தவர்களுக்கு சின்னமும் சூட்டப்பட்டது.

அருள்சகோதரி நிர்மலா பயணக்கஷ்டங்கள் மத்தியிலும் தமது விடுமுறைகாலத்தை இத்தகைய விதமாக பயன்படுத்திக் கொண்டது பாராட்டுக்குரியதாகும்.

தகவல்

செயலர்— கி. பங்கிராஸ்

## அருள்திரு பீற்றர்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கக் கொண்ட அருள்திரு பீற்றர் பொன்கலன் O.M.I. யாழ் வந்திருந்த வேளையில் மாசி மாதம 12 ஆம் திகதி தமது குருத்துவத்தின் 25வது ஆண்டு நிறைவாகிய வெள்ளி விழாவைக் கொண்டாடினார். அன்று காலை 11 மணிக்கு கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் தனது பெற்றோர், குருக்கள், அ. ம. தி. குருமட மாணவர்கள், கன்னியர்கள், உற்றார் உறவினர், நண்பர்களுடன் இணைந்து யூபிலி நன்றிப்பலியை நிறைவேற்றினார்.

● தகவல்: அருள்திரு பிரான்சிஸ் டானியல் O.M.I.

## அருள் சகோதரர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நன்றித் திருப்பலி கண்டி ஆயர் வியானி பெனாண்டோ ஆண்டகை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அருள் சகோதரர் மார்க்கஸ் அவர்களும், பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அருள் சகோதரர் இக்னேசியஸ் அவர்களும் தங்களின் பணி வாழ்வில் பல அனாதை இல்லங்கள், பங்குத்தளங்கள், உருவாக்கல்பயிற்சித் தளங்கள், ஆசிரிய பணிகள் என பணி வாழ்வால் புனித பிரான்சிஸ்கன் சகோதர சபையின் வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றி வருகிறார்கள்.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1995ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.